**தலைப்பு 009 – நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 009 – நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினாலும் ஏனைய விளக்கத் தகவல்களினாலும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூலை 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் 04 மீண்டுவரும் செலவு விடயங்களில் 14 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது. | புதிதாக 03 அலுவலக உதவியாளர்கள் சேர்க்கப்பட்டமையால் மேலதிக நேர வேலையில் ஈடுபடுத்த வேண்டிய தேவைப்பாடு ஏற்படாமை, அரச நிதிச் சுற்றறிக்கை 01/2023 மற்றும் 02/2023 மூலம் செலவுகளை முகாமைத்துவம் செய்தல், உத்தியோக பிரயாணங்களுக்காக அலுவலக வாகனங்கள் பயன்படுத்துதல் மற்றும் இணைந்த படிகள் செலுத்தப்படாமை, எதிர்பார்த்தவாறு வாகனங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு தேவைப்படாமை மற்றும் முன்னைய செயலாளர் 3 ½ | நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாதங்கள் வெளிநாட்டு விடுமுறை பெற்றுக்கொள்ளல் மற்றும் சேவையை விட்டு விலகுதல் காரணமாக போக்குவரத்துக் கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகையினை செலுத்தும் தேவைப்பாடு ஏற்படாமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டது. | |
| (ஆ) | இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பராமரிப்புச் செலவு விடயத்தின் ஆரம்ப ஏற்பாடு ரூபா 250,000 தொகையாக இருந்தது. அந்த செலவு விடயத்திற்கு நி.பி. 66 இன் மூலம் ரூபா 200,000 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக அந்த செலவு விடயத்தில் ரூபா 36,227 தொகைக்கான சேமிப்புக்காக காட்டப்பட்டுள்ள காரணங்கள் கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | சபையினால் பயன்படுத்தப்பட்ட நிழல்பிரதி இயந்திரம் ஒன்று மற்றும் வாயு சீராக்கி இயந்திரம் ஒன்று எதிர்பார்க்கப்படாதவாறு செயற்படாமல் இருந்தமையால் திருத்த வேலை மேற்கொள்ள நேரிட்டிருந்ததுடன், அந்த திருத்த வேலைக்காக 2102 செலவு விடயத்தின் கீழ் வழங்கியிருந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் நி.பி. 66 இன் கீழ் ஏற்பாடுகள் மாற்றிக் கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்க் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 16.2 | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயலாற்றுகை அறிக்கையின் வரைபு, நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கை முன்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை மற்றும் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அறிக்கை வழங்க வேண்டியிருந்தமையால் தயாரித்தல் தாமதம் அடைந்திருந்தது. எவ்வாறாயினும் | கணக்காய்வு அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கணக்காய்வு அறிக்கை கிடைத்த பின்னர் செயலாற்றுகை அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 2020/02 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 04 | | சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | பாரியளவில் கொள்வனவு மேற்கொள்ளப்படாமை ம அனைத்து காகிதாகிகள் கொள்வனவும் அரச வாணிப பலவின கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் பெறுகைத் திட்டமொன்று தயாரித்தல் நடைமுறைச் சாத்தியமாக காணப்படவில்லை என கணிக்க வேண்டும். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2023 நவம்பர் 30 திகதிய 05/2023 இலக்கம் கொண்ட அரச வழிகாட்டல் கோவையின் பிரிவு 06 | (i) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்கிற்கு பணமாக கிடைத்திருந்த ரூபா 663,000 தொகை ஏஸீஏ 5 படிவத்தில் குறுக்குப் பதிவு மூலம் பெறுவனவு என பதிவு செய்யப்பட்டிருந்தது. | இது பணமாகக் கிடைத்த பெறுவனவொன்றல்ல. சம்பளம் செலுத்தும் போது அறவீடு செய்யப்படும் கடன் தவணை ஆகும். குறுக்குப் பதிவு மூலம் கணக்கீடு செய்தல் சரியான என அறிவிக்கின்றேன். | ரூபா 663,000 தெகை ஏஸீஏ 5 படிவத்தில் பணமாக பெறுவனவு என குறிப்பிடப்பட வேண்டும். |
| | | (ii) | ஏஸீஏ 6 படிவத்திற்கு பதிலாக ஸிகாஸ் மென்பொருள் மூலம் வெளியிடப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கை (SA 82) நிதிக் கூற்றுக்களில் இணைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிக் | சில பொருட்களின் பெறுமதி சரியாக தீர்மானிக்க வேண்டியிருந்தமை மற்றும் கணக்குப் பிரிவிற்கு ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டுடிருந் | நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கை (SA 82) நிதிக்கூற்றுக்களுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கூற்றுக்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் என ரூபா 21,014,390 இற்கான மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்று (SA 82) வெற்றுக் கூற்றாக காணப்பட்டது. | தமையால் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் CIGAS மென்பொருளிற்கு உள்ளீடு செய்வதற்கான காலம் வரையறுக்கப்பட்டிருந்தது. 2024 ஆண்டு முதல் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளளப்பட்டு வருகின்றது. |

**3. நல்லாளுகை**

**3.1 பொதுமக்களுக்கு சேவைகள் நிறைவேற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2016 இன் 12 இலக்க தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் பிரிவு 10 இற்கு இணங்க பொது மக்களின் தேவைப்பாடு மற்றும் நிறுவனம் தொடர்பாக குற்றச்சாட்டுகள் அல்லது பாராட்டுக்கள் வெளியிடுதல் உத்தியோகபூர்வ இணைய தளமொன்றின் மூலம் வசதிகள் ஏற்படுத்தியிருக்க வேண்டிய போதிலும் சபையினால் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது இணைய தளம் நிர்மாணித்தலின் ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேவையான தகவல் தரவுகள் இணைய தளத்திற்கு உள்ளீடு செய்யும் அலுவல்கள் இந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொது மக்களின் தேவைப்பாடு மற்றும் நிறுவனம் தொடர்பாக குற்றச்சாட்டுகள் அல்லது பாராட்டுக்கள் வெளியிடுதல் உத்தியோகபூர்வ இணைய தளமொன்றின் மூலம் வசதிகள் ஏற்படுத்தியிருக்க வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 32 ஆக இருந்த போதிலும் உள்ளவாறான பதவியணி 21 ஆக காணப்பட்டமையால் பதவியணியில் 11 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றில் 04 பதவிகளின் வெற்றிடமாக இருந்த காலம் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட வீச்சு ஒன்றினை பெற்றிருந்தது. அதற்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையினை அங்கீகாரம் பெற்ற பின்னர் வெற்றிடப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபை நிறுவப்பட்டு 21 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவில் ஒவ்வொரு பதவிக்காகவும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை தயாரித்திருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை விரைவாக தயாரிக்கப்பட்டு வருகின்றது. | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை அங்கீகரித்து தேவையான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2018 பெப்ரவரி 20 திகதிய 03/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 2(iv) பந்திக்கு இணங்க எக்காரணத்தினாலும் 67 வயதை பூர்த்தியடைந்துள்ள எவரும் அரச சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றில் நியமனம் செய்யக்கூடாதிருந்த போதிலும், 67 வயதை மிகைத்துள்ள ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்களுக்கு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 04 பதவிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை. | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக ஆட்சேர்க்க முடியாமையினால் கடமைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்லும் கடின தேவைப்பாட்டின் காரணமாக உச்சமட்ட சேவையொன்றை பெற்றுக்கொள்வதற்காக அனுபவமுள்ள உத்தியோகத்தர் எண்ணிக்கையாளர்கள் நீதிச் சபை ஆணைக்குழுவின் இணக்கத்துடன் சேர்க்கப்பட்டுள்ளதுடன், புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளக் கூடாது என்ற கொள்கையின் | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக முன்னர் இருந்த உத்தியோகத்தர்களின் சேவையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஈ) | 2018 ஜனவரி 24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்காக மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | நீதிசார் அலுவல்கள் பேணிச் செல்வதன் நெருங்கிய தேவைப்பாட்டின் காரணமாக ஊழியர்கள் பயிற்சிக்காக அனுப்புவதற்கு இயலாமல் இருப்பதனால் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரித்தல் நடைமுறைச் சாத்தியமில்லை என குறிப்பிட விரும்புகின்றேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |